# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்


-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - AUGUST 2019

மலர்: 12 இதழ்: 11 ஆகஸ்ட் 2019 விலை: ரூ. 10


## சற்றுச்சூழல் காப்பதும் இறை வழிபாடே!

## சமூக நல்லிணக்கத்திற்கு நபிகளாரின் வழிமுறை



## ஆயுத விற்பனைக்காக உருவாக்கப்படும் போர்முனைகள்

## தியாகத்தின் ஆண்டுவிழா பக்ரீத்!



# உண்ணும்போது இறை நினைவு

இறைவன் கூறுகிறான்:

● "(இறைத்)தூதர்களே! நல்ல பொருள்களிலிருந்தே நீங்கள் உண்ணுங்கள் நற்காரியங்களை செய்யுங்கள் நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை நான் நன்கு அறிபவன். (திருக்குர்ஆன் 23:51)

● இறைவன் அருளிய ஆகாரத்திலிருந்து உண்ணுங்கள், பருகுங்கள் பூமியில் குழப்பஞ்செய்து கொண்டு திரியாதீர்கள். (திருக்குர்ஆன் 2:60)

## இறைநாமத்தில் துவங்குவோம்!

உங்களில் ஒருவர் சாப்பிட்டால் இறைவன் பெயரை ("பிஸ்மில்லாஹி" என்று) கூறி (ஆரம்பம் செய்யட்டும்). ஆரம்பத்தில் இறைவன் பெயரை கூற மறந்து (இடையில் நினைவு வந்து)விட்டால் 'பிஸ்மில்லாஹி அவ்வலஹு வஆகிரஹு' எனக் கூறட்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி), ஆதாரம்: அபூதாவுத், திர்மிதி.

(பொருள்: இதன் ஆரம்பத்திலும் இறுதியிலும் இறைவனின் திருப் பெயர் கொண்டு (நான் உண்கிறேன்)

## இறைநாமம் கூறாமல் உண்டால் ஷைத்தான் கூட்டு !

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், 'பிஸ்மில்லாஹ்' கூறாத உணவை ஷைத்தான் ஆகுமாக்கிக் கொள்கிறான்'.

அறிவிப்பவர்: ஹுதைஃபா (ரலி)– ஆதாரம்: முஸ்லிம்

## உண்ணும் போது இறைப்பொருத்தம் பெற!

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்,'ஒரு அடியான் உணவைச் சாப்பிடும் போது அந்த உணவுக்காக அவனைப் புகழ்வதையும், நீரைப் பருகும் போது அந்த நீருக்காக அவனைப் புகழ்வதையும் இறைவன் பொருந்திக்கொள்கிறான். அறிவிப்பவர்: அனஸ் (ரலி) ஆதாரம்: முஸ்லிம், திர்மிதி,

## உண்ட பிறகு கூற வேண்டிய பிரார்த்தனை!

● "அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்அமனீ ஹாதா வரஸகனீஹி மின்கைரி ஹவ்லின் மின்னீ வலா குவ்வதின்" என யாரேனும் கூறினால் அவரின் முன் பாவங்கள் மன்னிக்கப்படும். ஆதாரம்: அபூதாவூது, திர்மிதி

பொருள்: எனது எவ்வித சக்தியும் ஆற்றலும் இன்றி எனக்கு இவ்வுணவை வழங்கி உண்ணச்செய்த இறைவனுக்கே எல்லாப்புகழும்.

● நபி (ஸல்) அவர்கள் முன்னாலிருந்து உணவுத்தட்டு எடுக்கப்படுமானால் 'அல்ஹம்து லில்லாஹி ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரக்கன் ஃபீஹி கைர முவத்தஇன் வலா முஸ்தக்னன் அன்ஹு ரப்புனா' என்று கூறுவார்கள்.

பொருள்: துய்மையான ஏராளமான புகழ் அனைத்தும் இறைவனுக்கே உரியன. இறைவா! நீ உணவின் பால் தேவையுடையவன் அல்லன்! உன்னை யாரும் விட்டுவிட முடியாது!



அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 12 இதழ்: 11 ஆகஸ்ட் 2019 விலை: ரூ. 10

## பொருளடக்கம்

சுற்றுச்சூழல் காப்பதும் இறை வழிபாடே! -2
சுற்றுச்சூழல் பாதுகாக்க இறை வழிகாட்டுதல் -4
நீர் அருந்துவதன் ஒழுக்கங்கள்-6
சித்திரவதைக்கு ஆளாகி சத்தியத்தை மறுத்த நபித்தோழர்! -7
ஈவிரக்கமற்ற ஆயுத முதலைகள்-8
உணவை இரவில் மூடிவைத்தல் -10
ஆயுத விற்பனைக்காக உருவாக்கப்படும் போர்முனைகள்!-11
ஐவேளைத் தொழுகைகளின் சிறப்பு -12
திருக்குர்ஆன் வன்முறையைத் தூண்டுகிறதா? -13
சமூக நல்லிணக்கத்திற்கு நபிகளாரின் வழிமுறை -16
தொழுகை- ஒழுக்கம் வளர்க்கும் பயிற்சி -17
மத நூல்களைத் தவறாகத் திரிப்பது எப்படி? -18
பணிவோடு உண்ணுங்கள் -20
இரவல் தந்தவன் கேட்கின்றான்.. கொடுக்கத் தயாரா?-21
பயங்கரவாதமும் அதிபயங்கரவாதமும் -23
கொல்லவந்த போதும் மன்னித்த பெருந்தகை!-24
வாசகர் எண்ணம் -25

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஓராண்டு சந்தா **Rs.120-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **08867971835**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

**www.quranmalar.com www.waytoparadise.in**

# சுற்றுச்சூழல் காப்பதும் இறை வழிபாடே!

● இயற்கை வளங்களான நீர்நிலைகள், காடுகள், காட்டுயிரிகள், காற்று மண்டலம், பறவைகள், கடற்கரைகள் என அனைத்தும் மனித குலத்துக்காக இறைவன் வடிவமைத்து வழங்கிய பொக்கிஷங்களாகும். மனித இனம், விலங்கினம், பறவையினம், தாவர இனம், கடல்வாழ் உயிரினங்கள் என அனைத்தின் நல்வாழ்வும் இந்த சுற்றுச்சூழலின் சமநிலையில்தான் உள்ளது. இந்த சமநிலையில் ஏற்படும் மாற்றங்கள் சுற்றுச்சூழலை மட்டுமின்றி உயிரினங்களின் வாழ்வுக்கும் அச்சுறுத்தலாகவும், ஆபத்தாகவும் அமைந்து விடுகின்றன.

● நவீன விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி, அவை மூலம் உண்டான அதிநவீன இயந்திரங்கள், அவற்றின் உற்பத்திகள், தொழிற்சாலைகள், இவற்றின் கழிவுப்பொருட்கள் போன்ற பலவும் சுற்றுப்புறச் சூழலை மாசாக்கி வருகின்றன. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறுகின்ற கழிவுப்பொருள்களால் நீர்நிலைகளும். காற்றும் மாசு படுகிறது.

● காடுகளும் காடுகளில் காணப்படும் மரங்களும் வியாபார நோக்கத்தில் அழிக்கப்படுகின்றன. அதன் காரணமாக மழை பொய்த்துப் போகிறது. பருவநிலை மாறுகிறது. பருவநிலை மாற்றத்தின் காரணமாக பல்வேறு சிக்கல்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

● இவை போக வல்லரசுகளும் கார்ப்பரேட் ஆதிக்க சக்திகளும் நலிந்த நாடுகளில் நடத்தும் நிலத்தடி வளச் சுரண்டல்களும் சுயநல வியாபாரத் திட்டங்களும் அங்குள்ள மக்களை வாழவிடாமல் தடுக்கின்றன. (உதாரணம்: போபால் நச்சுக் காற்று, ஹைட்ரோகார்பன், மீத்தேன்) கொடிய நோய்களும் பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடுகின்றன.

● பேரழிவு ஆயுதங்களும் அணுக்கழிவுகளும் கசிவுகளும் கதிர்வீச்சுகளும் அதிபயங்கரமான அழிவுகளை நிகழ்த்துகின்றன. நாளுக்குநாள் நிலைமை கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருக்கிறது.

● **மக்கள் தங்கள் கைகளால் எதைச் சம்பாதித்தார்களோ அதன் காரணமாக தரையிலும் கடலிலும் அராஜகமும் குழப்பமும் தோன்றிவிட்டிருக்கின்றன. (திருக்குர்ஆன் 30:41)**

## இயற்கை என்ற மாபெரும் பொக்கிஷம்.

பூமியின் மீதான இந்த வாழ்வை மனிதகுலம் செவ்வனே வாழவேண்டும் என்பதற்காக எண்ணற்ற அற்புதமான அருட்கொடைகளை அளவிலாக் கருணைகொண்ட இறைவன் வழங்கியுள்ளான். அந்த இறைவனின் அருட்கொடைகளில் மிக முக்கியமானது இயற்கை என்ற மாபெரும் பொக்கிஷம்.

● **இறைவன்தான் உங்களுக்கு இப்பூமியைத் தங்குமிடமாகவும், வானத்தை ஒரு விதானமாகவும் உண்டாக்கியிருக்கிறான் மேலும், அவன்தான் உங்களை உருவாக்கி உங்கள் உருவங்களை அழகாக்கி சிறந்த உணவு வசதிகளையும் அளித்தான். அவன்தான் அல்லாஹ்**

**உங்களுடைய இறைவன் அகிலத்தாருக்கெல்லாம் இறைவனாகிய அல்லாஹ் மிக பாக்கியமுடையவன். (திருக்குர்ஆன் 40:64)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)

**● நிச்சயமாக இறைவன் வானங்களில் உள்ளவற்றையும் பூமியில் உள்ளவற்றையும் உங்களுக்கு வசப்படுத்தி இருக்கிறான் என்பதையும் இன்னும் தன் அருட் கொடைகளை உங்கள் மீது புறத்திலும் அகத்திலும் நிரம்பச் செய்திருக்கிறான் என்பதையும் நீங்கள் அறியவில்லையா? (திருக்குர்ஆன் 31:20)**

## சுற்றுப்புறச்சூழல் காக்கும் பொறுப்பு

இந்த பூமியில் இறைவனின் பிரதிநிதியாக நாம் நியமிக்கப் பட்டுள்ளோம் என்றும் திருக்குர்ஆன் நமக்கு எடுத்துரைக்கிறது. எனவே நம்மை நம்பி ஒப்படைக்கப்பட்ட பொக்கிஷமாக இயற்கை வளங்களையும் வசதிகளையும் பாதுகாப்பது நம் ஒவ்வொருவர் மீதும் சுமத்தப்பட்ட பொறுப்பாக இருக்கிறது. இறைவன் இன்று நம் கைவசம் ஒப்படைத்துள்ள இயற்கை அருட்கொடைகளை யாரும் சுயநல நோக்கோடு சொந்தம் கொண்டாடி தான்தோன்றித்தனமாக பயன்படுத்த முடியாது. ஏனெனில் நம்மில் எவருமே இவற்றின் உரிமையாளர்கள் கிடையாது. இவற்றின் உண்மை உரிமையாளன் இறைவன் மட்டுமே! நாம் இவற்றைக் கடந்து செல்லும் வெறும் பயனாளிகள் மட்டுமே. இவை அனைத்து மனித குலத்துக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் இனி எதிர்காலத்தில் இங்கு வாழவிருக்கும் நமது தலைமுறையினருக்கும் சொந்தமானது என்ற பொறுப்புணர்வோடு நடந்துகொள்வது மிகமிக அவசியமாகும்.

## இறைவன் கண்டிப்பாக விசாரிப்பான்

**● வானங்களிலும், பூமியிலும் உள்ள யாவும் நிச்சயமாக அல்லாஹ்வுக்கே சொந்தம் என்பதை அறிந்து கொள்வீர்களாக! நீங்கள் எந்த நிலையில் இருக்கின்றீர்களோ அதை அவன் (நன்கு) அறிவான் மேலும் அவனிடத்தில் அவர்கள் மீட்டப்படும் அந்நாளில் அவன், அவர்கள் (இம்மையில்) என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதையும் அவர்களுக்கு அறிவிப்பான் - மேலும், அல்லாஹ் எல்லாப் பொருள்கள் பற்றியும் நன்கறிபவன். (திருக்குர்ஆன் 24:64)**

ஆம் மறுமை நாளில் இவற்றை நாம் பயன்படுத்தியது பற்றி விசாரிக்கப்படுவோம் என்பது உறுதி!

● இறைவனின் இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

‘நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்புதாரிகளே. உங்கள் ஒவ்வொருவரின் பொறுப்புக்கள் பற்றியும் நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள்...” (புகாரி, முஸ்லிம்)

எனவே இந்தப் பொறுப்புணர்வோடு சுற்றுப்புற சூழல் மாசுபடாமல் பேணுவது இந்த பூமியின் மீது இன்று வாழ்வோருக்கும் நலம் பயப்பதாக அமையும். எதிர்கால தலைமுறைகளுக்கும் பயனளிக்கும். மட்டுமல்ல இறைவனின் ஏவலுக்கேற்ப இவற்றைக் கட்டுப்பாட்டோடு பயன்படுத்தியதற்காக அவனது தரப்பிலிருந்து புண்ணியத்தையும் அதன்வழி அச்செயல் மறுமையில் சொர்க்கத்தையும் பெற்றுத்தரும்.

# சுற்றுச்சூழல் பாதுகாக்க இறை வழிகாட்டுதல்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது வெற்றுப்பிரச்சாரங்களால் நடைபெறப்போவது அல்ல. சுற்றுச்சூழல் பாதுகாப்பை நடைமுறை சாத்தியமானதாக ஆக வேண்டுமானால் அனைத்துத்தரப்பு மக்களிடமும் இருந்து ஈடுபாடும் உற்சாகமும் ஒத்துழைப்பும் வேண்டும்.

● இது இனம், நிறம், மொழி, மதம், நாடு என்ற வேற்றுமைகளைக் கடந்து முழு மனிதகுலமும் ஈடுபாட்டோடு முன்னெடுத்துச் செல்லவேண்டிய அவசரமான காரியமாகும். அதற்கு மக்களுக்கிடையே ஒரு கொள்கை ரீதியிலான பிணைப்பு தேவைப்படுவதை நீங்கள் காணலாம்.

● இவ்வாறு உலக மக்கள் ஒன்றிணைதலும் சக மனிதனை சகோதரனாக பாவித்தலும் அவனுக்கும் தன்னைப் போலவே சம உரிமைகள் உண்டு என்ற அங்கீகார உணர்வும் அங்கு அவசியமாகும்.

● அதேபோல தட்டிக் கேட்க ஆளில்லை என்ற உணர்வால் இயற்கைவளங்களை சுயநலத்திற்காக கொள்ளை அடிப்பவர்களும் அவற்றை மற்றவர்களுக்குக் கிடைக்காமல் தடுத்து வைப்பவர்களும் அவற்றை மாசு படுத்துபவர்களும் திருத்தப்பட வேண்டும்.

இவற்றை நிறைவுசெய்யக் கூடிய ஒரு வாழ்வியல் கொள்கையைத்தான் முன்வைக்கிறது இஸ்லாம்.

● **மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான் ..... நிச்சயமாக இறைவன் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான். (திருக்குர்ஆன் 4:1)**

அதாவது ஒன்றே மனித குலம், ஒருவனே இறைவன், அவனது கண்காணிப்பின் கீழ் உள்ளோம், நம் வினைகளுக்கு மறுமையில் விசாரணையும் அதற்கேற்ப சொர்க்கமும் நரகமும் வாய்க்க உள்ளது என்ற அடிப்படை உண்மைகளை மனித மனங்களில் விதைத்து அவர்களை சீர்திருத்தி ஒழுக்கம் நிறைந்த ஓர் உலகை கட்டியெழுப்பவே இஸ்லாம் விழைகிறது. அந்த வகையில் மனித உள்ளங்களைப் பண்படுத்தி அவர்களை இன, நிற, மொழி,நாடு போன்ற வேற்றுமைகளைக் கடந்து மனித சமத்துவமும் சகோதரத்துவமும் பேணக்கூடிய சமூகமாக உருவாக்குகிறது. சுயநலம் தவிர்த்து பொதுநலம் பேணுவோருக்கும் தியாகங்கள் புரிவோருக்கும் இறைவனிடம் பரிசுகள் காத்திருக்கின்றன என்ற நம்பிக்கை மக்களை



அதற்காக ஊக்குவிக்கிறது. அதேவேளையில் இயற்கை வளங்களில் அத்துமீறல்கள், மனித உரிமை மீறல்கள் செய்வோர் இறைவனால் தண்டிக்கப்படுவார்கள் என்று எச்சரிக்கவும் செய்கிறது இஸ்லாம்.

### சுற்றுச்சூழல் அழிப்பிற்குத் தடை

எந்த ஒரு உயிரினத்தையும் அநியாயமாகக் கொல்வதை இஸ்லாம் தடை செய்கிறது. உணவுக்காக இறைவன் படைத்துள்ள பிராணிகளைக் கூட கேளிக்கைக்காகக் கொல்வது தடை செய்யப்பட்டதே. காடுகளை, காட்டுயிரிகளை, பறவைகளை, தாவரங்களை அநியாயமாக அழிப்பதையும் நீர்நிலைகளை மாசு படுத்துவதையும் இஸ்லாம் அறவே தடுக்கிறது. போர்களின் போது கூட எதிரி நாட்டில் இவற்றைச் செய்ய இஸ்லாம் அனுமதிப்பதில்லை.

போர்களின் போது பொதுவாக எதிரி நாட்டு நீர்நிலைகளை யானையை விட்டுக் கலக்குவதும் மரங்களை வெட்டி சாய்ப்பதும் பயிர்களையும் விவசாய நிலங்களையும் சேதப்படுத்துவதும் மன்னர்களின் வழக்கம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேற்கொண்ட தற்காப்புப் போர்களின் போது இவற்றையெல்லாம் முழுமையாகத் தடை செய்தார்கள். தமது படை வீரர்களுக்கு பயிர்களை, உணவினைத் தரும் கனி வர்க்க மரங்களை, நீர் நிலைகளை, குடியிருக்கும் வீடுகளை சேதப் படுத்தக் கூடாது என்றும் முதியோர்,நோயாளிகள், பெண்கள், குழந்தைகளை, புறமுதுகிட்டு ஒடுவோர்களையும், வளர்ப்பு பிராணிகளையும் கொல்லவோ அல்லது துன்புறுத்தவோ கூடாது என்றும் கட்டளை இட்டார்கள்.

### மரம் நடுதல்

சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்க காடுகள் அழிக்கப்படுவதைத் தவிர்ப்பதுடன் மரங்களை நடுவது காலத்தின் கட்டாயமாகும். இஸ்லாம் மரம் நடுவதை புண்ணியம் தரும் ஒரு வணக்க வழிபாடாகப் போதிக்கின்றது.

- இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஸ்லிம் ஒருவர் ஒரு மரத்தை நட்டு அல்லது விதைவிதைத்து விவசாயம் செய்து, அதிலிருந்து (அதன் விளைச்சலை அல்லது காய்கனிகளை) ஒரு பறவையோ, ஒரு மனிதனோ அல்லது ஒரு பிராணியோ உண்டால் அதன் காரணத்தால் ஒரு தர்மம் செய்ததற்கான பிரதிபலன் அவருக்குக் கிடைக்கும் (நூல்: புகாரி)

### நீர் நிலைகள் பாதுகாப்பு

சுற்றுப் புறச் சூழல் பாதுகாப்பில். நீர்நிலைகளைப் பாதுகாப்பதும், நீர் வளத்தைப் பாதுகாப்பதும், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதும் அவசியமாகும். நிலையான நீரில் சிறுநீர் கழிப்பதை நபியவர்கள் தடுத்துள்ளார்கள்.

- 'ஓடாமல் தேங்கி நிற்கும் தண்ணீரில் உங்களில் எவரும் சிறுநீர் கழித்துவிட்டுப் பின்னர் அதில் குளிக்க வேண்டாம்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பு: அபூஹுரைரா(ரலி) நூல்: புகாரி)

அதேபோல நீரை வீண்விரயம் செய்வதையும் இஸ்லாம் தடை செய்கிறது:

● **உண்ணுங்கள், பருகுங்கள் எனினும் வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனெனில் அல்லாஹ் அளவு கடந்து விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை.(திருக்குர்ஆன் 7:31)**

● “ஓடுகின்ற ஆற்றில் தொழுகைக்காக அங்கத்தூய்மை செய்தாலும் அளவோடு நீரை பயன்படுத்துங்கள். வீண்விரயம் கூடாது என்று அறிவுறுத்தினார்கள் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள். ” ( அஹ்மத்)

இந்த அறிவுரை அனைத்து இயற்கை அருட்கொடைகளுக்கும் பொருந்தும் என்பதை அறியலாம்.

### பொது இடங்களில் தூய்மை பேணுதல்

பொது இடங்களான சாலை ஓரங்கள், இரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள் ஆகிய இடங்களை அசுத்தப்படுத்துவதன் மூலம் பலர் மக்களின் சாபத்திற்கு ஆளாகிறார்கள்.

● ’பாதையோரங்களிலும் நிழல் தரும் இடங்களிலும் மலஜலம் கழித்து மக்களின் சாபத்தைப் பெறுவதையிட்டும் நீங்கள் பயந்து நடந்து கொள்ளுங்கள்’ என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

பொது இடங்களில் குப்பை மற்றும் நாற்றம் வீசும் கழிவுப்பொருள்களைக் கொட்டுவோருக்கும், காற்றை மாசுபடுத்தி அண்டை அயலாருக்கு தொல்லை கொடுப்போருக்கும் இந்த எச்சரிக்கை பொருந்தும் என்பது தெரிந்ததே.

### தனி நபர் உடல் தூய்மையும் முக்கியம்

சாலை ஓரங்களிலும் சுவர்களிலும் சிறுநீர் கழித்தாலோ அவற்றை யாரும் பொருட்படுத்தப்படாத நிலை தொடர்கிறது. சிறுநீரும் கழித்த பின் கழுவி சுத்தப்படுத்தப் படவேண்டிய வி‘யமே என்பதை மக்கள் உணராததன் காரணமாக சாலைகளில் சிறுநீரின் நாற்றத்தையும் அதன்மூலம் உண்டாகும் சுகாதார சீர்கேடுகளையும் நாம் சகித்துக் கொண்டே வாழவேண்டியுள்ளது. ஆனால் இஸ்லாம் வழிபாட்டின் ஒரு முக்கியப் பகுதியாக சிறுநீர் சுத்தம் பற்றிய பேணுதலைக் கற்பிக்கிறது. குழந்தைகள் ஏழு வயதில் இருந்தே அந்தப் பேணுதலுக்குப் பழக்கப்படுத்தப் படுகிறார்கள்.

● ’சுத்தம் இறைநம்பிக்கையில் பாதியாகும் என்று இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் : முஸ்லிம்)

### அசுத்தம் நீக்குதலும் வழிபாடே!

● “தொல்லை தரும் பொருளைப் பாதையிலிருந்து அகற்றுவதும் இறை நம்பிக்கையின் ஒரு கிளையாகும்“ என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

# நீர் அருந்துவதன் ஒழுக்கங்கள்

● ‘நின்றுக் கொண்டு நீர் அருந்துவதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்’ அறிவிப்பவர்: அபூ ஸயீத் அல்-குத்ரி, ஆதாரம்: முஸ்லிம்.

● குடிக்கும் பாத்திரத்தில் மூச்சு விடுவதையும் (ஊதி குடிப்பதையும்) நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி) ஆதாரம்: திர்மிதி, அபூதாவுத், இப்னுமாஜா

# சித்திரவதைக்கு ஆளாகி சத்தியத்தை மறுத்த நபித்தோழர்!

நபிகளார் மக்கா நகரில் சத்திய பிரச்சாரத்தை துவக்கியபோது இஸ்லாத்தை நலிந்த மக்களே அதிகமாக ஏற்றுக் கொண்டனர். அவர்களே ஆதிக்க வர்க்கத்தினரின் தாக்குதல்களுக்கு ஆளாயினர். பலரை சித்திரவதை செய்து கொல்லவும் செய்தனர். அவ்வாறு கொல்லப்பட்ட யாசிர்- சுமைய்யா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர் அம்மார் (ரலி) அவர்கள்.

சத்தியத்தை ஏற்றதற்கு தண்டனையாக மக்கா குறைஷிகள் அவரை சுடு மணலில் ஆடையின்றி கிடத்தினார்கள். கொடுமையான சித்திரவதை களுக்குப் பின்னரும் அம்மார்(ரலி) மன உறுதியுடன் திகழ்வதைக் கண்டு திடுக்குற்ற அபூஜஹ்ல் சித்ரவதைகளை அதிகரித்தான். இஸ்லாத்தையும் நபிகளாரையும் மறுத்துரைக்கவும் மக்காவில் அவர்கள் வழிபட்டு வந்த கடவுளர்களைப் புகழ்த்திக் கூறவும் சொல்லி அம்மாரை வற்புறுத் தினார்கள். முழங்காலிட வைத்து அவரது தலையை தண்ணீரில் முக்கி மூர்ச்சையாக்கின்றனர். இணைவைப்பாளர்களால் உயிர் போகும் அந்நிலையில் அம்மார்(ரழி) அவர்களை. சித்திரவதைகள் வரம்புமீறிப் போகவே அவர்கள் கூறியவாறே செய்கின்றார் அம்மார்.

அதைத் தொடர்ந்து அவரை அவர்கள் விட்டு விடுகின்றனர். அழுதவாறு நபிகளாரிடம் வந்த அம்மார் அவர்கள் நான் இணைவைப்பு வார்த்தைகளை கூறிவிட்டேன் என மிகுந்த துக்கத்தோடு கூறினார். அப்போது கீழ்கண்ட வசனம் நபிகளாருக்கு அருளப்பட்டது:

● **எவரேனும் இறைநம்பிக்கை கொண்ட பிறகு கட்டாயத்திற்குள்ளாகி அவருடைய உள்ளம் இறைவனை ஏற்றுக் கொள்வதில் நிம்மதியுடன் இருக்கும் நிலையில் நிராகரித்தாரானால் அவர் மீது குற்றமில்லை! ஆனால் எவர் மனநிறைவுடன் நிராகரிப்பை ஏற்றுக்கொள்கின்றாரோ, அவர் மீது அல்லாஹ்வின் கோபம் உண்டாகும். இத்தகையவர்களுக்கு மாபெரும் வேதனையும் இருக்கிறது. (திருக்குர்ஆன் 16:106)**

● தொடர்ந்து இஸ்லாத்திலேயே நீடித்த அம்மார் மேலும் பற்பல சித்திரவதைகளுக்கு ஆளானார். சில காலத்திற்குப் பின் நபிகளாரும் தோழர்களும் மதீனாவுக்குக் குடிபெயர்ந்தபோது மதீனாவில் பள்ளி கட்டும் பணியில் அம்மார்(ரலி) இருமடங்கு சுமை சுமந்து வருவார்கள். புழுதி படிந்த அவர்களது மேனியையும் முகத்தையும் நபி(ஸல்) அவர்கள் தம் திருக்கரங்களால் துடைத்திருக்கிறார்கள்

● “அம்மாரின் இஸ்லாமிய நம்பிக்கை உறுதி அவரின் எலும்புகளுக்குள்ளும் ஊடுறுவியுள்ளது. யார் அம்மாருடன் பகை கொள்கிறாரோ அவர் அல்லாஹ்வுடன் பகை கொள்கிறான்” என்ற நபிகளார் கூறினார்கள். இந்த நபிமொழியைச் செவியுற்ற இன்னொரு நபித்தோழர் காலித் பின் வலீத்(ரழி) அம்மார்(ரழி) அவர்களுடன் இருந்த மனப் பிணக்கை நீக்கி சமாதானம் செய்து கொண்டார்கள்.. சிறந்த போர் வீரரான அம்மார்(ரழி) அபூபக்கர்(ரழி) அவர்களின் ஆட்சியில் நிகழ்ந்த யமாமா, பாரசீகப் போரில் கலந்து கொண்டார்கள்.

<u>உலக பயங்கரவாதமும் உண்மைகளும்</u>

# ஈவிரக்கமற்ற ஆயுத முதலைகள்

ஆயுதம் என்று வரும்போது அதில் சிறிய கொலை ஆயுதங்கள் முதல் மிகப்பெரிய ஏவுகணைகள், விமானங்கள், விமானம் தாங்கிக் கப்பல்கள் வரை எல்லாம் அடங்கும். அவை அனைத்தும் இன்று ஆயுதச் சந்தைகளில் கிடைக்கின்றன. பெரிய, சிறிய நாடுகள் மட்டுமின்றி ஆயுதம் தாங்கிப் போர் செய்கிற குழுக்கள், இயக்கங்கள் என அனைவருமே இங்கு வாடிக்கையாளர்கள். கத்தி, துப்பாக்கி, எறிகுண்டு என்கிற நிலை எல்லாம் தாண்டி இன்று மிகப்பெரிய பேரழிவுகளை கண நேரத்தில் உருவாக்கி கோடிக்கணக்கான மக்களைத் துல்லியமாகத் தாக்கக்கூடிய பேரழிவு ஆயுதங்கள் இந்த சந்தைகளில் கிடைக்கின்றன. அணு, இரசாயன, உயிரி, கதிர்வீச்சு ஆகிய வகைப்பட்ட ஆயுதங்களும் இவற்றில் அடங்கும். முடிந்தவரையில் இத்தகைய பேரழிவு ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதில் போர்முனையில் நிறுத்தப்பட்டுள்ள நாடுகளும் அல்லாதவையும் போட்டி போடுகின்றன. அல்லது பின்னிருந்து இயக்கும் சக்திகளால் போட்டிக்கு உள்ளாக்கப் படுகின்றன.

உலகம் முழுவதையும் ஆட்டிப் படைக்கும் இவ்வணிகத்தில் ஒரு சிலரே வியாபாரிகள். மற்ற எல்லோரும் வாங்குபவர்கள்தான். இது ஒரு ஏகபோக (monopoly) வணிகம். ஏகபோகத்திற்கான அத்தனை கொடூரப் பண்புகளும், விளைவுகளும் இதில் வெளிப்படுகிறது. உலக பயங்கரவாதத்தின் மிகக் கோரமான முகம் இதுதான். மக்களைக் கொன்று குவிப்பதற்கேன்றே நடத்தப்படும் ஏகபோக கொலை வணிகம் என்றே இதைக் கூறவேண்டும்! உலகெங்கும் கோடிக்கணக்கான மக்கள் ஈவிரக்கமின்றி கொல்லப்படுவதும் தங்கள் இருப்பிடங்களில் இருந்து அநியாயமாக துரத்தப் படுவதும் பட்டினிக்கும் நோய்க்கும் ஆளாக்கப்படுவதும் இவர்களின் கல்நெஞ்சங்களை சற்றும் கரைப்பதில்லை. செல்வமும் செல்வாக்கும் சேர்க்கும் வெறி இவர்களின் கண்களை மூடி மறைத்து விடுகிறது.

● **செல்வத்தைப் பெருக்கும் ஆசை உங்களை மெய்மறதியில் ஆழ்த்தி வைத்திருக்கிறது. நீங்கள் உங்கள் புதைகுழிகளைச் சந்திக்கும் வரை. அவ்வாறில்லை, விரைவில் (அதன் பலனை) நீங்கள் அறிந்து கொள்வீர்கள். பின்னர் அவ்வாறல்ல, விரைவில் (அதன் பலனை) நீங்கள் அறிந்து கொள்வீர்கள். (திருக்குர்ஆன் 102: 1-3)**

என்ற இறைவனின் எச்சரிக்கை மற்றெல்லோரையும் விட வீரியமாக இவர்களை நோக்கித்தானோ என்று எண்ண வைக்கிறது.

## நாட்டு வருமானங்களை காவு வாங்கும் வணிகம்

ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் Stockholm International Peace Research Institute (SIPRI) *(சிப்ரி)* புதிய தரவுகளின்படி, உலகத்தின் மொத்த இராணுவச் செலவு *1822* பில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளது. *2018* ஆம் ஆண்டில் இராணுவத்திற்காக மிக அதிகமாக செலவு செய்த நாடுகள் அமெரிக்கா, சீனா, சவுதி அரேபியா, இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகியவையாகும். இவை உலக இராணுவ செலவினங்களில் *60* சதவீதமாகும்.

இந்த அழிவாயுதங்களை யார் அதிகம் வாங்குகின்றனர்? எந்தெந்த நாடுகள் இத்தகைய அழிவாயுத இறக்குமதிக்கு அதிகம் செலவிடுகின்றன? இதில் முதலிடம் பெறுவது நம் நாடுதான். இந்தியா பாகிஸ்தான் உட்பட பல நலிந்த நாடுகளின் தங்கள் நாட்டு வருமானங்களை இந்த ஆயுத முதலைகளுக்கு அர்ப்பணம் செய்கின்றன என்பது எவ்வளவு கவலைக்குரிய விஷயம்! பிற முக்கியமான ஆயுத இறக்குமதி நாடுகள், சிங்கப்பூர், மலேசியா, கிரீஸ், தென்கொரியா, அல்ஜீரியா, ஆஸ்திரேலியா, துருக்கி, சவூதி அரேபியா, ஐக்கிய அரேபிய எமிரேட், சீனா, நார்வே ஆகியன. இந்த ஆண்டு பட்ஜெட்டில் இந்தியா *4,31,011* கோடி ரூபாயை அதாவது *431011,00,00,000* ரூபாயை “பாதுகாப்பு”க்காக ஒதுக்கியுள்ளதை நிதிநிலை அறிக்கையில் இருந்து அறிகிறோம். இது வளர்ச்சிக்காக செலவிடப்பட்டால் எப்படி இருக்கும் என்பதை யோசித்துப்பாருங்கள்.

அமெரிக்காவின் காங்கிரசுக்கான ஆய்வுச் சேவை (Congressional Research Service) அறிக்கையின்படி உலக அழிவாயுத விற்பனையில் அமெரிக்காவின் பங்கு 68.7 சதவீதமாகும். இந்த கொலை வியாபாரத்தில் - அதாவது அழிவாயுத விற்பனையில் - அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக நிற்கிற நாடுகளாக உள்ளவை ரஷ்யா, ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ், பிரிட்டன், ஸ்பெயின், சீனா, இஸ்ரேல், நெதர்லான்ட், ஸ்வீடன், சுவிட்சர்லாந்து, உக்ரேன், கனடா ஆகியன. இந்த நாடுகள் எல்லாம் சேர்ந்து செய்கிற அழிவாயுத வணிகம் மொத்தத்தில் 32 சதவீதம். கொலை வணிகத்தில் அமெரிக்கா எந்த அளவிற்கு ஏகபோகம் கொண்டுள்ளது என்பதை கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

## பின்தங்கிய நாடுகளே இலக்கு!

*1987*ஆம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும் கோஸ்டாரிகாவின் குடியரசுத் தலைவருமான ஆஸ்கார் ஏரியஸ் சான்செஸ் கூறினார். “. இந்தப் புவியில் வாழ்கிற ஒவ்வொரு பத்து மனிதருக்கும் ஒரு கொலை ஆயுதத்தை நாம் உற்பத்தி செய்துள்ளோம். ஆனால் நம்மால் சாத்தியம்தான் என்றாலும் பசியை ஒழிப்பது பற்றி நாம் சிந்திப்பதில்லை. மொத்த அழிவாயுத வணிகத்தில் முக்கால் வாசியை பின் தங்கிய நாடுகளில் கொண்டு குவிப்பதற்கு நமது சர்வதேச நெறிமுறைகள் வழிவகுக்கின்றன.”



## விற்பனை அதிகரிப்புக்கான உத்திகள்

மிகப்பெரிய அளவு ஊழல்கள் நடைபெறும் துறையாகவும் ஆயுத விற்பனை உள்ளது. இத்துடன் இணைந்த தேசப் பாதுகாப்பு மற்றும் இராணுவ இரகசியம் முதலான சொல்லாடல்கள் ஊழலை ஊற்றி வளர்க்கின்றன. மிகப்பெரிய அளவில் குவட்ரோஷி போன்ற இடைத்தரகர்கள் (போபர்ஸ்

ஊழல்) இதில் இலாபம் குவிக்கின்றனர். கார்ப்பரேட்கள் நேரடியாகக் களத்தில் இறங்கி யுத்த பீதியை ஏற்படுத்திப் பரப்புவது, முடிவெடுக்கும் இடத்தில் உள்ள அரசியல் வாதிகள் மற்றும் இராணுவ சிவில் உயரதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுப்பது, எதிரி நாட்டு இராணுவ முன்னேற்பாடுகள் குறித்துப் பொய்யான தகவல்களை பரப்பி போட்டியை ஊக்குவிப்பது, உள்நாட்டு ஊடகங்களுக்கு லஞ்சம் கொடுத்து போருக்கு ஆதரவான கருத்துகளை உருவாக்குவது, கார்ப்பரேட்டுகளுக்கிடையே இரகசிய கூட்டுகளை உருவாக்கி ஆயுதங்களின் விலையை அபரிமிதமாக உயர்த்துவது முதலியன ஆயுத விற்பனையை அதிகரிக்க கார்ப்பரேட்டுகள் மேற்கொள்ளும் உத்திகள்.

**போர்கள் இவர்களது உயிர்மூச்சு**

பேராசிரியர் அ. மார்க்ஸ் கூறுகிறார்:

ஆயுத விற்பனை செழிப்பதற்கு போர்கள் அவசியம். போர்களற்ற அமைதியான உலகை ஆயுத விற்பனையாளர்களால் சகித்துக்கொள்ள இயலாது. பல நாட்டு இராணுவங்களுக்கும் ஆயுதப் போராட்டக் குழுக்களுக்கும் இத்தகைய பயிற்சி அளிப்பதில் இந்தப் பின்னணியும் சேர்ந்து கொள்கிறது.

உலக அளவில் பல மூன்றாம் உலக நாடுகள் ஏழ்மையிலும், பஞ்சத்திலும், கடனிலும் மூழ்கடிக்கப்படுவதற்கு ஆயுத விற்பனையே காரணம். இந்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் தனது வரவு செலவு திட்டத்தில் 19 சதவீதத்தை பாதுகாப்புக்காகச் செலவிடுகிறது. பொது நலத்திற்கு வெறும் ஒரு சதவீதம், கல்விக்கு 5 சதவீதத்திற்கும் குறைவே என்பதோடு ஒப்பிட்டுப் பார்த்தபோதுதான் இதன் அபத்தம் புரியும். ஆனால் இதை யாரும், எதிர்கட்சிகளும் கூட வலுவாக எதிர்ப்பதில்லை. தேச பாதுகாப்பில் அக்கறையில்லை என்கிற கெட்ட பெயர் வந்துவிடக்கூடாது என்கிற அச்சமே காரணம்.

தேசப்பாதுகாப்பு என்பது இராணுவத்தை வலுப்படுத்துவதால் மட்டுமே சாத்தியமாகிவிடுவதில்லை. பகைக்கான அரசியல் தீர்வு ஒன்றின் மூலமே தேசபாதுகாப்பை உறுதி செய்யமுடியும். தேவையற்ற தேசிய வெறி, பேச்சுவார்த்தைகளை நம்பியிராத வல்லரசு வெறி ஆகியவையே போர்களுக்கும், பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தல்களுக்கும் காரணமாகின்றன.

# உணவை இரவில் மூடிவைத்தல்

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் , ‘நீங்கள் உறங்(கப் போ)கும்போது விளக்குகளை அணைத்து விடுங்கள். கதவுகளைத் தாழிட்டுவிடுங்கள். தண்ணீர் பைகளைச் சுருக்கிட்டு மூடிவிடுங்கள். உணவையும் பானத்தையும் மூடிவையுங்கள்’ என்று கூறினார்கள். ‘அதன் மீது ஒரு குச்சியை குறுக்காக வைத்தாவது (மூடிவையுங்கள்)’ என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னதாக எண்ணுகிறேன். அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), ஆதாரம்: புகாரி

# ஆயுத விற்பனைக்காக உருவாக்கப்படும் போர்முனைகள்!

பெரும் பெரும் முதலீடுகளை செய்து உருவாக்கப்படும் போர் விமானங்கள், ஏவுகணைகள், நீர்மூழ்கிக் கப்பல்கள், இன்ன பிற போர் தளவாடங்கள், பேரழிவு ஆயுதங்கள் இவற்றையெல்லாம் தயாரித்துவிட்டு வெறுமனே இருக்க முடியுமா? இவற்றில் முதலீடு செய்த தொழில் உடமைகளுக்கும் இவர்களுக்கு வட்டிக்குக் கடன் கொடுத்த வங்கியாளர்களுக்கும் ஒரே குறிக்கோள் இவற்றை எப்படியாவது உலக நாடுகளின் இராணுவங்களுக்கு விற்க வேண்டும். அதற்காக இவர்களைப் பொறுத்தவரையில் உலகில் போர்கள் நடந்தேயாக வேண்டும். மக்கள் கொத்துக் கொத்தாக மடிவது பற்றி கவலையே இல்லை.

● மக்களின் ஒத்துழைப்பும் பங்கேற்பும் இல்லாமல் போர்களை நிகழ்த்த முடியாது. மக்கள்தான் போர்முனைக்கு வீரர்களாக செல்லவேண்டும். மக்களிடம் இருந்து வசூலித்த வரிப்பணங்களில் இருந்துதான் போருக்கான செலவை செய்தாக வேண்டும். போர்முனைக்கு மக்கள் செல்லவேண்டுமானால் அதற்காக மக்களை மூளைச்சலவை செய்தாகவேண்டும். அதைத்தான் இன்று ஆதிக்க சக்திகளின் கைப்பாவையாக உள்ள ஆட்சியாளர்கள் தத்தமது நாடுகளில் செய்து வருகிறார்கள்.

எப்படி? தங்களின் கைக்கூலிகளை ஏவி சக்திவாய்ந்த ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் வாயிலாக மக்களிடையே பொய்களையும் விஷக் கருத்துக்களையும் பரப்புகிறார்கள். தாக்குதலுக்கு உள்ளாக இருக்கும் நாட்டின் மீது அல்லது சமூகத்தின் மீது வெறுப்பை விதைத்து மக்களை ஆவேசம் கொள்ள வைக்கிறார்கள். உதாரணமாக அதற்கேற்றவாறு இவர்களின் கைக்கூலிகள் மூலம் உலக அரங்கில் நாடகங்கள் அரங்கேற்றப் படுகின்றன.

**சில உதாரணங்கள்:**

அ) அமெரிக்காவின் இரட்டை கோபுர இடிப்பை நடத்தியது பின்லேடன்தான் என்று ஊடகத் தந்திரங்கள் மூலம் மக்களை நம்பவைத்து ஆப்கானிஸ்தானத்தின் மீது போர் தொடுத்து அந்த நாட்டைக் கைவசப்படுத்தியது. தாலிபான்கள் தடை செய்து வைத்திருந்த ‘அஷீஷ்’ போதைப் பயிர் நிலங்களை முழுவதுமாக கைப்பற்றி மீண்டும் அதை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வது.

ஆ) ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் பதுக்கப்பட்டு உள்ளன என்று பரப்புரைசெய்து அந்நாட்டைத் தாக்கி சத்தாம் ஹுசைனை கொன்று அந்நாட்டைக் கைப்பற்றியது. எண்ணெய் வளங்களை கைவசமாக்கியது.

**கையாட்கள் மூலம் பயங்கரவாத அமைப்புகள் உண்டாக்குதல்**

● தங்களின் வஞ்சகத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக அனைத்து வாய்ப்புகளையும் தவறாமல் பயன்படுத்துகிறார்கள். பெரும் செலவில்

தங்கள் கையாட்கள் மூலம் மதம் சார்ந்த அல்லது இனம் சார்ந்த பயங்கரவாத அமைப்புகளை உருவாக்குகிறார்கள். இந்த அமைப்புகள் மூலம் மதவெறி மற்றும் இனவெறியூட்டும் பிரச்சாரங்கள் செய்து ஆதரவாளர்களை உருவாக்குகிறார்கள். இவர்களைக் கொண்டு அப்பாவிகளைக் கொல்லும் குண்டு வெடிப்புகள், தற்கொலைப்படைத் தாக்குதல்கள் நடத்துகிறார்கள். இதுபோன்ற ஒரு அமைப்புதான் ஐஎஸ்ஐஎஸ். இது முழுக்கமுழுக்க இஸ்ரேலின் மொசாத் மற்றும் அமெரிக்க ஊஐயு வால் உருவாக்கப்பட்ட ஒன்று.

### போர்முனைகள் மூலம் தொடர் சுரண்டல்கள்

● நாடுகளை எப்போதும் போர் முனையில் நிறுத்துவதன் மூலம் போரிடும் இரண்டு நாடுகளுக்கும் தேவையான பொருளாதாரத்தை கடனாகக் கொடுத்து வட்டி ஈட்டுகிறார்கள். ஆயுதமும் சப்ளை செய்கிறார்கள். நாடுகள் இக்கடனைத் திருப்பிச் செலுத்தாத பட்சம் அந்நாடுகளின் வளங்கள் இவர்களுக்குத் தாரை வார்க்கப்படுகின்றன. அந்நாட்டு மக்களின் மீது வரிச்சுமை அதிகரிக்கிறது. உலகில் ஒவ்வொரு நாடும் தங்கள் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கும் மேலாக இராணுவத்திற்காக செலவிட வேண்டிய நிர்பந்தமும் இதனால்தான்.

● அதற்குப் புறம்பாக ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு இடையே குறைந்தபட்சம் ஒருமுறை பெரிய அளவிலான போரை எப்படியாவது நிகழ்த்துகிறார்கள். தங்களுக்குக் கட்டுப்படாத அரசுகளுக்கு எதிராக உள்நாட்டு கிளர்ச்சியாளர்களை ஊக்குவித்து கலகங்கள் மற்றும் இராணுவப்புரட்சி நிகழ்த்துதல், அந்நிய நாட்டின் தாக்குதலில் இருந்து பாதுகாக்கிறோம் என்ற பெயரில் பலவந்தமாக உள்நுழைந்து இராணுவத்தளம் அமைத்தல் போன்றவை இவர்களது வாடிக்கை.

● அதற்கு முன்னோட்டமான ஒரு செயல்கள்தான் சமீபத்தில் இலங்கையில் நடந்த தொடர் குண்டுவெடிப்புகளும் அதற்கு முன்னதாக நடந்த இப்படி அப்பாவி மக்களின் இரத்தத்தை ஆறாக ஓட்டி ஆயுத விற்பனையும் நடத்துகிறார்கள். உலக நாடுகளை அச்சுறுத்தி தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்துகிறார்கள்.

# ஐவேளைத் தொழுகைகளின் சிறப்பு

**● நிச்சயமாக தொழுகை இறைநம்பிக்கை கொண்டோர் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாக விதிக்கப்பட்டுள்ளது. (அல்குர்ஆன் 4:103)**

**● இறைநம்பிக்கை கொண்டோர் நிச்சயமாக வெற்றி பெற்று விட்டனர். அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் தொழுகையில் உள்ளச்சத்தோடு இருப்பார்கள். மேலும் அவர்கள் தம் தொழுகைகளை (க் குறித்த காலத்தில் முறையோடு) பேணுவார்கள். (அல்குர்ஆன் 23:1,2,9)**

**● தொழுகையை நீங்கள் நிலைநாட்டுங்கள். அவனுக்கே அஞ்சி நடங்கள் அவனிடம் தான் நீங்கள் ஒன்று சேர்க்கப்படுவீர்கள். (அல்குர்ஆன் 6:72)**

# திருக்குர்ஆன் வன்முறையைத் தூண்டுகிறதா?

சமீபத்தில் இலங்கையில் நடந்த குண்டுவெடிப்பு நிகழ்வுகளுக்குப் பிறகு திருக்குர்ஆன் வன்முறையைத் தூண்டுகிறது என்ற பரப்புரை சமூக வலைத் தளங்களில் சிலரால் மேற்கொள்ளப்படுகிறது. திருக்குர்ஆனின் ஒரு சில வசனங்களை எடுத்துக் காட்டி இந்தப் பரப்புரை மேற்கொள்ளப் படுகிறது. குர்ஆனில் சில வசனங்களை காட்டி 'முஸ்லிம் அல்லாதவர்களை கொல்லச் சொல்கிறது பாருங்கள்' என்று இஸ்லாத்திற்கு எதிராக செயல்படும் சிலர் தவறான விளக்கம் கொடுக்கின்றனர். ஆனால் உண்மை என்ன?

ஒரு உதாரணம் மூலம் அறிவோம்:

● **(உங்களை வெட்டிய) அவர்கள் எங்கே காணக்கிடைப்பினும், அவர்களைக் கொல்லுங்கள் இன்னும், அவர்கள் உங்களை எங்கிருந்து வெளியேற்றினார்களோ, அங்கிருந்து அவர்களை வெளியேற்றுங்கள் ஏனெனில் ஃபித்னா (குழப்பமும், கலகமும் உண்டாக்குதல்) கொலை செய்வதை விடக் கொடியதாகும். இருப்பினும், மஸ்ஜிதுல் ஹராமில் (அதாவது மக்காவில் கஅபா ஆலய வளாகத்தில்) அவர்கள் (முதலில்) உங்களிடம் சண்டையிடாத வரையில், நீங்கள் அவர்களுடன் சண்டையிடாதீர்கள் ஆனால் (அங்கும்) அவர்கள் உங்களுடன் சண்டையிட்டால் நீங்கள் அவர்களைக் கொல்லுங்கள் - இதுதான் நிராகரிப்போருக்கு உரிய கூலியாகும். (திருக்குர்ஆன் 2:191)**

இவ்வசனத்தில் "அவர்கள்" என்று கூறப்பட்டுள்ளது. எந்த மொழியில் அவர்கள் என்று கூறப்பட்டாலும் அது யாரைக் குறிக்கிறது என்பதை முந்தைய வசனங்களில் தேடிப் பார்க்க வேண்டும். பொதுவாக முஸ்லிமல்லாத மக்களை அது குறிக்கின்றதா? குறிப்பிட்ட இனத்தவர்களைக் குறிப்பிடுகின்றதா? குறிப்பிட்ட செயல்களில் ஈடுபடும் மக்களை குறிப்பிடுகின்றதா? இதற்கான விடையை இதற்கு முந்தைய வசனங்களில் தேட வேண்டும்.

இதற்கு முந்தைய வசனத்தில் கூறப்பட்டதை அப்படியே கீழே கொடுத்துள்ளோம். இந்தக் குற்றச்சாட்டு விஷமத்தனமானது என்பதை அதிலிருந்து யாரும் புரிந்து கொள்ள முடியும்.

● **உங்களிடம் போருக்கு வருவோருடன் அல்லாஹ்வின் பாதையில் நீங்களும் போர் செய்யுங்கள்! வரம்பு மீறாதீர்கள்! வரம்பு மீறியோரை அல்லாஹ் நேசிக்க மாட்டான். (அல்குர்ஆன் 2:190)**

உங்களுடன் யாரேனும் வலியவந்து வம்புச் சண்டையிட்டால் அவர்களுடன் போரிடுங்கள் என்று இவ்வசனத்தில் கூறிவிட்டு அவர்களைக் கொல்லுங்கள் என்று அடுத்த வசனத்தில் கூறுகிறான் இறைவன்.

அவர்களைக் கொல்லுங்கள் என்பது பொதுவாக முஸ்லிமல்லாத வர்களைக் குறிக்கவில்லை. மாறாக உங்களுக்கு எதிராகப் படைதிரட்டி வரும் அவர்களுடன் போரிடுங்கள் என்றே கூறுகிறது என்பதை இதிலிருந்து அறியலாம். முற்பகுதியை மறைத்து விட்டு பிற்பகுதியை

மட்டும் சில விஷமிகள் எடுத்துக் காட்டுவதால்தான் இத்தகைய சந்தேகம் ஏற்படுத்தப்படுகிறது.

### போர்கால நியதிகளை புறக்கணிக்க முடியுமா?

ஒரு சமுதாயத்துடன் இன்னொரு சமுதாயம் அநியாயமாகப் போருக்கு வந்தால் அவர்களை எதிர்த்துப் போராட வேண்டும் என்பதில் என்ன தவறு? எந்த அரசாவது தன்னுடன் போருக்கு வரக் கூடியவர்களை எதிர்த்துப் போராடாதிருக்குமா? அவ்வாறு நடக்கும் போரில் எதிரிகளைக் கொல்லாது ‘இதோ எங்களைக் கொன்று கொள்ளுங்கள்’ என்று சொல்லி ஆயுதங்களைக் கீழே போடச் சொல்லிக் கட்டளையிடுமா?

போர் என வந்துவிட்டால் எல்லாவிதமான தர்மங்களையும் தூக்கி எறிவது உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் திருக்குர்ஆன் ”அவர்களுடன் போரிடுங்கள்! ஆனால் வரம்பு மீறாதீர்கள்! வரம்பு மீறுபவர்களை அல்லாஹ் நேசிக்க மாட்டான்” எனக் கூறிப் போர்க்களத்திலும் புதுநெறியை புகுத்துகிறது.

நியாய உணர்விருக்கும் எவரும் பாராட்டக்கூடிய ஒரு வசனத்தை எவ்வாறு தவறான பிரச்சாரத்திற்கு பயன்படுத்துகிறார்கள் பாருங்கள்.

ஆக, அவர்களை வெட்டுங்கள் என்பது போர்க்களத்தில் ஆயுதம் தாங்கி தாக்க வரும் எதிரிகளைக் குறித்து சொல்லப்பட்டதாகும் என அறிந்து கொள்ளலாம்.

### யார் அந்த ‘அவர்கள்’?

பூமியில் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டும் பணிக்காக வந்தவர் நபிகள் நாயகம். மக்காவில் தனது பிரச்சாரத்தை மேற்கொண்டு மக்களை சத்தியத்தின் பால் அழைத்தார்கள் அவர்கள். ஒன்றே மனிதகுலம், படைத்த இறைவனை மட்டுமே வணக்கத்திற்குரியவனாக எடுத்துக் கொள்வோம், மறுமையில் இறைவனிடம் விசாரணையும் சொர்க்கமும் நரகமும் உள்ளன என்ற பொறுப்புணர்வோடு நற்காரியங்கள் செய்வோம், தீமைகளில் இருந்தும் பாவங்களில் இருந்தும் மனிதஉரிமை மீறல்களில் இருந்தும் விலகி வாழ்வோம், சக மனிதனை சகோதரனாகவும் சமமானவனாகவும் மதித்து வாழ்வோம் என்ற இஸ்லாம் கூறும் கொள்கைகளை பிரச்சாரம் செய்து இஸ்லாம் என்ற இறைமார்க்கத்தை வளர்த்தார்கள்.

ஆனால் இஸ்லாம் கூறும் மனித சமத்துவம் மற்றும் இறைவனை இடைத்தரகர் இன்றி நேரடியாக வணங்குதல் போன்ற தத்துவங்கள் ஆதிக்க சக்தியினருக்கும் கடவுளின் பெயரால் மக்களை சுரண்டிவந்த இடைத் தரகர்களுக்கும் பேரிடியாக அமைந்ததால் அவர்கள் இஸ்லாத்தையும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களையும் முழு மூச்சாக எதிர்த்தார்கள். பலவிதமான சித்திரவதைக்களையும் கொடுமைகளையும் அவர்கள் மேல் திணித்தார்கள். 13 வருட தொடர் சித்திரவதைகளுக்குப் பிறகு நபிகள் நாயகமும் தோழர்களும் தங்கள் சொந்த மண்ணைத் துறந்து ஏற்கெனவே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்த மக்கள் வாழும் மதீனா நகருக்கு அகதிகளாக வந்து

சேர்ந்தார்கள்.

நாளடைவில் இஸ்லாம் வளர்ச்சி காண மதீனாவின் ஆட்சிப் பொறுப்பும் நபிகளாரின் கைகளுக்கு வந்தது. இப்படிப்பட்ட சூழலில் மக்கா வாசிகள் இஸ்லாத்தின் வளர்ச்சி தங்களுக்கு பாதகமாக அமையும் என்று பயந்தார்கள். எனவே நபிகளாரையும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோரையும் அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மதீனாவுக்கு படைதிரட்டி வந்து போர் தொடுத்தார்கள். இப்படிப்பட்ட சூழலில் நபிகளாருக்கு இறைவனிடம் இருந்து வந்த அறிவுறுத்தல்களை கொண்டவைதான் மேற்கண்ட வசனங்கள்.

மக்காவில் இஸ்லாத்தைப் பின்பற்றிய மக்களை 13 வருடங்களாக தொடர் சித்திரவதைகள் செய்து ஊரைவிட்டுத் துரத்திய பின் அவர்களை பின்தொடர்ந்து வந்து மதீனாவிலும் அடியோடு அழிக்கவேண்டும் என்று தீராத வெறியோடு வந்தவர்களைத்தான் “அவர்கள்” என்று குர்ஆன் குறிப்பிடுகிறது. இப்படிப்பட்ட “அவர்களை” சந்திக்க வேண்டிய விதத்தில் சந்திக்காமல் இருக்க முடியுமா?

## இஸ்லாத்தின் நோக்கம் தர்மத்தை நிலைநாட்டுவது

பூமியில் இறைவனின் பெயரால் பொய்களைப் பரப்பி மக்கள் ஏமாற்றப் படுவதையும் சுரண்டப்படுவதையும் அதர்மம் பரவுவதையும் தடுத்து நிறுத்த உலகைப் படைத்து பரிபாலித்துவரும் ஏக இறைவனால் முழு அதிகாரத்தோடு அனுப்பப்படுபவர்களே இறைத்தூதர்கள் என்பதை நாம் நினைவு கூர வேண்டும். அவர்களின் முக்கியப் பணி ‘இறைவனுக்குக் கீழ்படிதல்’ (அரபு மொழியில் இஸ்லாம்) என்ற உயரிய சீர்திருத்தக் கொள்கையை மக்களிடையே பரப்பி அவர்களை நேர்வழிப் படுத்துவதே. மூட நம்பிக்கைகளில் மூழ்கிக் கிடக்கும் மக்களிடம் தெளிவான கடவுள் கொள்கையையும் மறுமை நம்பிக்கையையும் விதைப்பதன் மூலம் அவர்களைத் திருத்தி இறைவனுக்குக் கட்டுப் பட்டவர்களாக மாற்றி அம்மக்களை ஈருலகிலும் - அதாவது இவ்வுலகிலும் மறுமை வாழ்விலும் - வெற்றி அடையச் செய்வதே இஸ்லாம்

அதே வேளையில் அதர்மத்தின் காவலர்களும் அக்கிரமசீலர்களும் ஆதிக்க வர்க்கமும் இந்த சீர்திருத்தப் பணிக்கு எதிராக அணிதிரண்டு வரும்போது அவர்களுக்கு அடிபணிந்தால் தர்மம் பரவாது. அதர்மமும் அமைதியின்மையுமே அராஜகமுமே இவ்வுலகில் பரவும். அவர்கள் இப்பணிக்கு முட்டுக்கட்டைகளாக வரும்போது அவற்றை எவ்வாறு பக்குவமாகக் கடந்து தர்மத்தை நிலைநாட்டுவது என்பது நாம் இறுதி இறைத்தூதர் நபிகளாரின் நடைமுறையிலிருந்து கற்றுக்கொள்ள முடிகிறது.

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

# சமூக நல்லிணக்கத்திற்கு நபிகளாரின் வழிமுறை

இஸ்லாம் என்ற வாழ்வியல் கொள்கை அனைத்து மனிதகுலத்திற்கும் சொந்தமானது. இனம், நிறம், மொழி, நாடு வேறுபாடுகளின்றி எவர் வேண்டுமானாலும் இதில் இணைந்துக்கொள்ள முடியும். இதில் இணைந்தவர்கள் எதிரிகளால் துன்புறுத்தப்பட்டால் பொறுமை மேற்கொள்ளுமாறும் அவர்களில் இருந்து விலகி வாழுமாறு இறைவனால் அறிவுறுத்தப் படுகிறார்கள். அவ்வாறு வாழும்போது மேற்கொண்டு எதிரிகள் வலியவந்து தாக்கினால் அல்லது கொல்லவந்தால் மட்டுமே அப்போது தற்காப்புக்காக போர் செய்ய அனுமதிக்கிறது இஸ்லாம். ஏனெனில் இஸ்லாத்தின் நோக்கம் மக்களைச் சீர்திருத்துவதுதான். மக்கள் நமது எதிரிகள் அல்ல. எதிர்ப்போரையெல்லாம் கொன்றொதுக்கி விட்டு அவர்களின் சமாதிகளின் மீது நிலைநாட்டப் படவேண்டியதல்ல தர்மம்! மாறாக மக்களைத் திருத்தி அவர்கள் கரங்களைக் கொண்டே வீழ்ந்துகிடக்கும் தர்மத்தை தூக்கி நிறுத்த வேண்டும். இதை மனித இனத்துக்குக் கற்றுக் கொடுப்பதற்குத்தானே கருணையுள்ள இறைவன் தனது தூதர்களை அவ்வப்போது இப்பூமிக்கு அனுப்புகிறான்.

நபிகள் நாயகமும் அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற நபித் தோழர்களும் தங்களது ஆட்சிக்குட்பட்ட இடங்களில் அல்லது நாடுகளில் முஸ்லிம் அல்லாதோருக்கு அனைத்து குடியுரிமையும் வசதிகளும் வழங்கி வந்துள்ளார்கள் என்பது வரலாறுகளில் பதியப்பட்ட அப்பட்டமான உண்மையாக உள்ளது.

### இஸ்லாத்தை கட்டாயப்படுத்தக் கூடாது என்ற கட்டளை

**● (இஸ்லாமிய) மார்க்கத்தில் (எவ்வகையான) நிர்ப்பந்தமுமில்லை. வழிகேட்டிலிருந்து நேர்வழி முற்றிலும் (பிரிந்து) தெளிவாகிவிட்டது ஆகையால், எவர் வழி கெடுப்பவற்றை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர் அறுந்து விடாத கெட்டியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக் கொண்டார் - அல்லாஹ்(யாவற்றையும்) செவியுறுவோனாகவும் நன்கறிவோனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 2:256)**

### மாற்றுமதத்தவர் வணங்கும் தெய்வங்களை ஏசாதீர்கள் என்ற கட்டளை

இஸ்லாம் படைத்தவனைத் தவிர வேறு யாரையும் எதனையும் வணங்கக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றது. மனிதர்களை வணங்கக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றது. மனிதர்கள் வணங்கக்கூடிய கற்சிலைகளுக்கு எவ்விதமான சக்தியும் கிடையாது. என்பதிலும் இஸ்லாத்திற்கு இரண்டாவது கருத்து கிடையாது. அதற்காகப் பிறமதத்தவர்களால் வழிபாடு செய்யப்படுபவர்களை ஏசலாமா என்றால் ஏசக் கூடாது என இஸ்லாம் திட்டவட்டாக உத்தரவிடுகிறது.

**● அல்லாஹ்வையன்றி யாரிடம் அவர்கள் பிரார்த்திக்கிறார்களோ அவர்களை ஏசாதீர்கள்! அவர்கள் அறிவில்லாமல் வரம்பு மீறி அல்லாஹ்வை ஏசுவார்கள். இவ்வாறே ஒவ்வொரு சமுதாயத்திற்கும் அவர்களது செயலை அழகாக்கிக் காட்டினோம். பின்னர் அவர்களின்**

மீளுதல் அவர்களின் இறைவனிடமே உள்ளது. அவர்கள் செய்து கொண்டிருந்தது பற்றி அவன் அவர்களுக்கு அறிவிப்பான். (அல்குர்ஆன் 6:108)

*(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)*

## வழிபாட்டு ஆலயங்களைக் காக்கும் கடமை

● “எங்கள் இறைவன் அல்லாஹ்வே“ என்று அவர்கள் கூறியதற்காகவே நியாயமின்றி அவர்களின் இல்லங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். மனிதர்களில் ஒருவர் மூலம் மற்றவரை அல்லாஹ் தடுத்திருக்காவிட்டால் மடங்களும், ஆலயங்களும், வழிபாட்டுத்தலங்களும், அல்லாஹ்வின் பெயர் அதிகமாகத் துதிக்கப்படும் பள்ளிவாசல்களும் இடிக்கப்பட்டிருக்கும். தனக்கு உதவி செய்வோருக்கு அல்லாஹ்வும் உதவுகிறான். அல்லாஹ் வலிமையுள்ளவன் மிகைத்தவன். (அல்குர்ஆன் 22:40)

## அனைவருக்கும் நீதி, அனைவருக்கும் தானதர்மங்கள்

*தான தர்மங்கள் செய்வதில் உதவிகள் புரிவதில் நீதியை நிலைநாட்டுவதில் முஸ்லிம் முஸ்லிமல்லாதவர் எனப் பாகுபாடு காட்டக் கூடாது எனவும் இஸ்லாம் தெளிவான கட்டளையைப் பிறப்பிக்கிறது.*

● மார்க்க விஷயத்தில் உங்களுடன் போரிடாதோருக்கும், உங்கள் வீடுகளிலிருந்து உங்களை வெளியேற்றாதோருக்கும் நன்மை செய்வதையும், அவர்களுக்கு நீதி செலுத்துவதையும் அல்லாஹ் உங்களுக்குத் தடை செய்யவில்லை. நீதி செலுத்துவோரை அல்லாஹ் விரும்புகிறான். (அல்குர்ஆன் 60:8)

● நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு, நீதிக்குச் சாட்சிகளாக ஆகி விடுங்கள்! ஒரு சமுதாயத்தின் மீதுள்ள பகை நீங்கள் நீதியாக நடக்காமலிருக்க, உங்களைத் தூண்ட வேண்டாம். நீதியாக நடங்கள்! அதுவே இறையச்சத்திற்கு நெருக்கமானது. அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவன்.

(அல்குர்ஆன் 5:8)

*முஸ்லிமல்லாத மக்களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று திருக்குர்ஆன் கட்டளையிட்டதோ அதற்கேற்பவே நபிகள் நாயகம் நடந்தார்கள்*

# தொழுகை- ஒழுக்கம் வளர்க்கும் பயிற்சி

● நிச்சயமாக நான்தான் அல்லாஹ்! என்னைத் தவிர வேறு நாயன் இல்லை. ஆகவே, என்னையே நீர் வணங்கும், என்னை தியானிக்கும் பொருட்டு தொழுகையை நிலைநிறுத்துவீராக. அல்குர்ஆன் 20:14

● “உங்கள் குழந்தைகள் ஏழு வயதை எய்திவிட்டால் அவர்களைத் தொழும்படி ஏவுங்கள். பத்து வயதை அடைந்த(தும் தொழமலிருந்தால்) அதற்காக அவர்களை அடியுங்கள்.” என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(நூல்கள்: அஹ்மத், அபூதாவூத்)

# மத நூல்களைத் தவறாகத் திரிப்பது எப்படி?

இஸ்லாம் தனது தெளிவான கடவுள் கொள்கையாலும் அது பேணும் மனித சமத்துவம் சகோதரத்துவம் போன்றவற்றாலும் உலகின் பெரும்பாலான மக்களை ஈர்த்து வருவது அனைவருக்கும் தெரிந்ததே. இந்த சீர்திருத்தகொள்கையின் வளர்ச்சியைக் கண்டு சகிக்காத சிலர் இஸ்லாத்தைத் தவறான ஒளியில் சித்தரிக்க முயல்கின்றனர். அப்படிப்பட்ட ஒரு முயற்சிதான் திருக்குர்ஆன் சொல்லாத ஒன்றை சொல்வதாக சித்தரிப்பதும் திருக்குர்ஆன் வசனங்களை முன்பின் தொடர்பை மறைத்துவிட்டு சில வசனங்களை அல்லது வசனங்களின் பாகங்களை எடுத்துக் காட்டி திருக்குர்ஆன் வன்முறையை போதிப்பதாக சித்தரிப்பதும்.

உலகில் எந்த புத்தகத்தை எடுத்துக் கொண்டாலும், ஒரே ஒரு வசனத்தை மட்டும் அதனுடைய சந்தர்ப்ப சூழல் ஒப்பீடு (context) இல்லாமல் புரிய முற்பட்டால், அது பல நேரங்களில் தவறான முடிவுகளுக்கு வழி வகுக்கும்.

இதோ நீங்கள் புரிந்து கொள்வதற்காக உலகில் அதிகமாக படிக்கப்படும் இரண்டு மத நூல்களில் இருந்து உதாரணம் காட்டுகிறோம்.

**பைபிள்:**

● பூமியின்மேல் அக்கினியைப் போட வந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன்.

50 ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்.

51 நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்க வந்தேன் என்று நினைக்கிறீர்களோ? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்க வந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

52 எப்படியெனில், இதுமுதல் ஒரே வீட்டிலே ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள், இரண்டுபேருக்கு விரோதமாய் மூன்றுபேரும், மூன்றுபேருக்கு விரோதமாய் இரண்டுபேரும் பிரிந்திருப்பார்கள்.

53 தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும், மாமி மருமகளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோதமாய்ப் பிரிந்திருப்பார்கள் என்றார் இயேசு. (லூக்கா 12:49-53)

● 'யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரனையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.' (லூக்கா 14:26)

● 'அன்றியும் தங்கள்மேல் நான் ராஜாவாகிறதற்கு மனதில்லாதிருந்தவர்களாகிய என்னுடைய விரோதிகளை இங்கே கொண்டுவந்து, எனக்கு முன்பாக வெட்டிப்போடுங்கள் என்றார்' (லூக்கா 19:27)

சந்தர்ப்ப சூழல் ஒப்பீடு (context) இல்லாமல், மேலே நாம் எடுத்துக்காட்டிய பைபிள் வசனங்களை மட்டும் ஒருவர் படிப்பாரேயானால், அவர் இயேசு பற்றியும், பைபிள் பற்றியும் ஒரு தவறான முடிவுக்கே வருவார்.

**பகவத் கீதை:**

- 'ஆத்மா நிலையானது, அழியாதது! உடல் வடிவம் தான் முடிவடையும். ஆதலால் பாரதா, போர் செய்!' (2:18)

- '(போரில்) கொல்லப்பட்டால் சொர்க்கம் செல்வாய், வென்றால் உலகம் ஆள்வாய். ஆதலால் போர் செய்ய துணிந்து எழுந்து நில்.' (2:37)

- 'வேத வன்னியே! வேதங்களை விமர்சிப்போரை, வெட்டி, கிழித்து, தீயால் சுட்டெரித்து தீக்கிரைக்காக்கி சாம்பலாக்கு!' அதர்வ வேத மந்திரம் (12.:.5.:.62)

சந்தர்ப்ப சூழல் ஒப்பீடு (context) இல்லாமல், மேலே நாம் எடுத்துக்காட்டிய கீதை வேத வசனங்களை மட்டும் ஒருவர் படிப்பாரேயானால், அவர் கீதையை பற்றி ஒரு தவறான முடிவுக்கே வருவார்.

**கார்ல் மார்க்ஸ் எழுதிய தாஸ் காப்பிடல்**

கார்ல் மார்க்ஸ் எழுதிய தாஸ் காப்பிடல் (மூலதனம்) ஒரு மத நூல் அல்ல. கம்யூனிச சித்தாந்த நூல். அந்த நூலில், கார்ல் மார்க்ஸ் இவ்வாறு எழுதுகிறார்.

'வன்முறை தான் புதிய சமூகத்தை பிரசவிக்கப் போகும் பழைய சமூகத்தின் மகப்பேறு மருத்துவர்.' (அத்தியாயம் 31)

சந்தர்ப்ப சூழல் ஒப்பீடு (context) இல்லாமல், மேலே நாம் எடுத்துக்காட்டிய இந்த ஒரு வசனத்தை மட்டும் வைத்துக் கொண்டு ஒருவர் முடிவுக்கு வந்தால், அவர் கார்ல் மார்க்ஸ் பற்றியும், கம்யூனிசம் பற்றியும் தவறான முடிவுக்கே வருவார்.

**திருக்குர்ஆனின் நிலைப்பாடு**

திருகுர்ஆனும் இதற்கு விதி விலக்கல்ல. சந்தர்ப்ப சூழல் ஒப்பீடு(context) இல்லாமல், ஒரே ஒரு வசனத்தை மட்டும் எடுத்துக் கொண்டு முடிவுக்கு வந்தால், தவறான முடிவுக்கே வருவர்.

உதாரணமாக:

முஸ்லீம் ஒரு நாளில் கட்டாயமாக ஐந்து வேளை தொழ வேண்டும் என்பதை அறிவோம்.

- **"தொழுபவர்களுக்கு நாசம் தான்!" (திருக்குர்ஆன் 107:4)**

இந்த ஒரு வசனத்தை மட்டும் ஒருவர் பார்த்தால், தொழுவது தவறு என்ற தவறான முடிவுக்கு வருவார். ஆனால், இந்த வசனத்திற்கு பின்னால் வரும் வசனங்களை படிக்கும் போது, சந்தர்ப்ப சூழல் ஒப்பீடு (context) நமக்கு விளங்கும்.

- **"அவர்கள் தம் தொழுகையில் அலட்சியமாய் இருக்கிறார்கள், அவர்கள் பிறருக்குக் காட்டுவதற்காகவே தொழுகின்றார்கள்." (திருக்குர்ஆன் 107:5, 6)**

4,5,6 வசனங்களை சேர்த்து பார்க்கும் போது, அலட்சியமாய் பிறருக்குக் காட்டுவதற்காகவே தொழுகின்றவர்களை பற்றித் தான் நான்காம் வசனம் பேசுகிறது என்பது நமக்கு நன்றாக விளங்கும்.

எனவே, எந்த புத்தகத்தை வாசித்தாலும், அந்த வசனங்களின் சந்தர்ப்ப சூழல் ஒப்பீடு (context) பார்க்காமல், நாம் ஒரு முடிவுக்கு வரக்கூடாது.

இதை நாம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.

திருகுர்ஆனை பொறுத்த வரையில், வன்முறையை தூண்டும் வசனங்கள் என்று அடையாளம் காட்டப்படும் எல்லா வசனங்களின் சந்தர்ப்ப சூழல் ஒப்பீட்டோடு பார்க்கும் பொழுது, அவை முஸ்லிம்கள் மேல் போர் தொடுத்து தீங்கிழைக்க நினைத்த எதிரிகளை பற்றிதான் பேசுகின்றன என்பது தெளிவாக விளங்கும்.

● **”(நம்பிக்கையாளர்களே!) மார்க்க விஷயத்தில் உங்களுடன் எதிர்த்து போர் புரியாதவர்களுக்கும், உங்கள் இல்லத்திலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும், நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுடன் நீங்கள் நீதமாக நடந்து கொள்வதையும் அல்லாஹ் தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதிவான்களை நேசிப்பவனாகவே இருக்கின்றான்.” (திருக்குர்ஆன் 60:8)**

இதுவே, இஸ்லாத்தின் நிலைப்பாடு.

# பணிவோடு உண்ணுங்கள்

உணவு என்பது இறைவனின் மாபெரும் அருட்கொடைகளில் ஒன்று. இறைவன் கூறும் முறைப்படி உண்ணும்போது அதுவும் ஒரு வழிபாடாக ஆகிறது.

## தங்கம், வெள்ளியிலான பாத்திரத்தில் குடிப்பது கூடாது!

● ‘எவர் தங்கம், வெள்ளிப் பாத்திரத்தில் குடிப்பாரோ அவர் தன் வயிற்றில் நரகத்தின் நெருப்பையே விழுங்குகிறார்’ என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: உம்முஸலமா (ரலி), ஆதாரம்: முஸ்லிம்.

## இருக்கின்ற உணவை பங்கிட்டு உண்ண வேண்டும்!

● “இருவருடைய உணவு மூவருக்குப் போதுமானதாகும். மூவரின் உணவு நால்வருக்குப் போதுமானதாகும்.” என இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூ ஹுரைரா(ரலி), ஆதாரம்: புகாரி.

## சொகுசாக அமர வேண்டாம் !

● “நான் சாய்ந்தபடி சாப்பிடமாட்டேன்.” என இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), ஆதாரம்: புகாரி.

## உணவில் குறை கூறாதீர்கள்!

● “நபி(ஸல்) அவர்கள் எந்த உணவையும் ஒருபோதும் குறை சொன்னதில்லை. பிடித்தால் அதை உண்பார்கள். பிடிக்காவிட்டால் அதை (உண்ணாமல்) விட்டுவிடுவார்கள்” அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), ஆதாரம்: புகாரி.

## உணவுப் பொருள் கீழே விழுந்து விட்டால் அதை சுத்தம் செய்து சாப்பிட வேண்டும்!

● (சாப்பிடும் போது) உங்களிடமுள்ள (உணவு) ஒரு துண்டு கீழே விழுந்து விட்டால் அதில் அசுத்தமான பொருள் ஒட்டியிருந்தால் அதை நீக்கிவிட்டு சாப்பிடவும். அதை ஷைத்தானுக்கு விட்டுக்கொடுக்க வேண்டாம். அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி) ஆதாரம்: முஸ்லிம்.

# இரவல் தந்தவன் கேட்கின்றான்.. கொடுக்கத் தயாரா?

நம்மில் ஒவ்வொருவருக்கும் வாய்த்துள்ள உடல், பொருள் ஆவி என எதுவுமே நமதல்ல. இதன் உண்மை உரிமையாளன் இறைவன்தான் என்பதை நாம் அறிவோம். ஆனாலும் நமக்கு இரவலாக இறைவன் தந்துள்ள இவற்றில் எதையாவது திருப்பிக் கேட்டால் அதை திருப்பிக் கொடுக்க நம்மில் யாருக்குத்தான் எளிதாக மனது வரும்? உதாரணமாக நம்மிடம் யாசிக்க யாராவது ஏழைகள் வந்துவிட்டால் அல்லது நம்மிடம் உபரியாக உள்ள செல்வத்தின்பால் தேவையுடையவர்கள் நம்மிடம் வந்து இறைஞ்சிக் கேட்க வந்துவிட்டால் நம் மனநிலை எப்படி மாறுதல் அடைகிறது? நாம் சுயபரிசோதனை செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

இறைத்தூதர்களில் ஒருவரான இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம் - அவர்மீது இறைவனின் சாந்தி உண்டாகுக) அவர்களிடம் இறைவன் கேட்டது ஆச்சரியமான ஒன்று! ஆம், அவர் தள்ளாத வயதில் அற்புதமாகப் பெற்றெடுத்த மகனையல்லவா இறைவன் தனக்காக தியாகம் செய்யுமாறு கேட்டான்! அதுவும் அந்த ஆருயிர் மகனை அறுத்துப் பலியிடுமாறு இறைவன் பணித்தான்! அதையும் எவ்விதத் தயக்கமும் இன்றி நிறைவேற்றத் துணிந்தார் அவர். உடனேயே இறைவன் அவரது பரீட்சையில் அவர் வெற்றிபெற்று விட்டதை அறிவித்து அதற்குப் பகரமாக இரு ஆட்டை அறுத்துப் பலியிடுமாறு பணித்தான்.

இந்த விவரங்கள் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறப்படுகிறது.

**● என் இறைவா! எனக்கு நல்லொழுக்கம் உடையவரை (வாரிசாகத்) தருவாயாக! (என்று இப்ராஹீம் கேட்டார்.) அவருக்கு சகிப்புத்தன்மை மிக்க ஆண் குழந்தை பற்றி நற்செய்தி கூறினோம். அவருடன் உழைக்கும் நிலையை அவர் (இஸ்மாயீல்) அடைந்த போது என் அருமை மகனே! நான் உன்னை அறுப்பது போல் கனவில் கண்டேன். நீ என்ன கருதுகிறாய் என்பதைச் சிந்தித்துக் கூறு“““ என்று கேட்டார்.**

**என் தந்தையே! உங்களுக்குக் கட்டளையிடப்பட்டதைச் செய்யுங்கள்! அல்லாஹ் நாடினால் என்னைப் பொறுமையாளனாகக் காண்பீர்கள்“““ என்று பதிலளித்தார்.**

**இருவரும் கீழ்ப்படிந்து (தமது) மகனை அவர் முகம் குப்புறக் கிடத்திய போது, இப்ராஹீமே! அக்கனவை நீர் உண்மைப்படுத்தி விட்டீர். நன்மை செய்வோருக்கு இவ்வாறே நாம் கூலி வழங்குவோம்“““ என்று அவரை அழைத்துக் கூறினோம். இது தான் மகத்தான சோதனை. பெரிய பலிப்பிராணியை அவருக்குப் பகரமாக்கினோம்.பின்வருவோரில் அவரது புகழை நிலைக்கச் செய்தோம். இப்ராஹீமின் மீது ஸலாம் உண்டாகும்! நன்மை செய்வோருக்கு இவ்வாறே கூலி வழங்குவோம். அவர் நம்பிக்கை கொண்ட நமது அடியார்களில் ஒருவர். (அல்குர்ஆன் 37 : 100-111)**

அந்த தியாகச் செம்மலின் இச்செயலை உலகுள்ளவரை மனிதகுலம் என்றும் நினைவு கூர வேண்டும் அதிலிருந்து இறைவனுக்காக அனைத்தையும் அர்ப்பணிக்கும் பாடத்தை அவர்கள் பெறவேண்டும் என்பதற்காகவே வருடத்தில் ஒருமுறை அந்நாளைத் தியாகத் திருநாளாகக் கொண்டாடும்படி பணித்தான்.

## தியாகத்தின் ஆண்டுவிழா பக்ரீத்

இத்தியாகத்தின் ஆண்டுவிழாவைக் கொண்டாடும் முகமாக வசதியுள்ள அனைத்து இறைவிசுவாசிகளும் தங்களால் இயன்ற ஒரு ஆட்டையோ மாட்டையோ ஒட்டகத்தையோ பலிகொடுத்து அதன் இறைச்சியை உறவினர்களோடும் ஏழைகளோடும் பங்கிட்டு உண்ணுமாறு பணித்துள்ளான் இறைவன். மாட்டையும் ஆட்டையும் ஏழு பேர் சேர்ந்து கூட்டாகவும் பலி கொடுக்கலாம். இன்று செல்வ வளமுள்ள நாடுகளில் இவ்வாறு பலி கொடுக்கப்பட்ட கால்நடைகளின் இறைச்சி பதப்படுத்தப் பட்டு ஏழை நாடுகளில் உள்ள மக்களிடையே விநியோகம் செய்ய அனுப்பி வைக்கப்படுகிறது. ஏழைகளின் உணவுத் தேவை நிறைவேறுதல், சகோதர உணர்வு பகிர்தல் உறவினர்களோடு உறவைப் புதுப்பித்தல் என்பன போன்ற பல நன்மைகளை இந்நாள் தாங்கி வந்தாலும் இறைவன் முக்கியமாக பார்ப்பது நம் இறையச்ச உணர்வைத்தான். இதோ தனது திருமறையில் கூறுகிறான்:

● **அவற்றின் மாமிசங்களோ, அவற்றின் இரத்தங்களோ அல்லாஹ்வை அடைவதில்லை. மாறாக உங்களிடமுள்ள (இறை) அச்சமே அவனைச் சென்றடையும். அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அவனை நீங்கள் பெருமைப்படுத்திட இவ்வாறே அதை அவன் உங்களுக்குப் பயன்படச் செய்தான். நன்மை செய்வோருக்கு நற்செய்தி கூறுவீராக! (அல்குர்ஆன் 22 : 37)**

## தியாகத் திருநாள் தாங்கி நிற்கும் பாடங்கள்

● இந்த தற்காலிக உலகம் என்ற பரீட்சைக் கூடத்தில் நம்மைப் பரீட்சிப்பதற்காக நம்மிடம் தரப்பட்டுள்ளவையே நமது உயிரும், உடலும், உறவுகளும், உடமைகளும். இவற்றை நமது என்று சொல்லிக் கொண்டாலும் இவற்றின் உண்மை உரிமையாளன் இறைவன் மட்டுமே.

● இரவல் தந்தவன் இவற்றைத் திருப்பிக் கேட்கும்போதும் எடுக்கும்போதும் நாம் உணர்ச்சிவசப்பட்டு ஏசுவதோ அவனது சாபத்தைப் பெற்றுத் தரும் வார்த்தைகளை உச்சரிப்பதோ கூடாது. அவ்வாறு நாம் அவற்றை இழக்க நேரிடும்போது பொறுமையை மேற்கொள்வதோடு இறைவன் இச்சோதனைக்கு நிச்சயமாக மறுமையில் பரிசு தருவான் என்ற உறுதியான நெஞ்சோடு இவற்றை எதிர்கொள்ள வேண்டும்.

● **ஓரளவு அச்சத்தாலும், பசியாலும் செல்வங்கள், உயிர்கள், மற்றும் பலன்களைச் சேதப்படுத்தியும் உங்களைச் சோதிப்போம். பொறுத்துக் கொண்டோருக்கு நற்செய்தி கூறுவீராக! தமக்கு ஏதேனும் துன்பம் ஏற்படும் போது “நாங்கள் அல்லாஹ்வுக்கே உரியவர்கள் நாங்கள் அவனிடமே திரும்பிச் செல்பவர்கள்“ என்று அவர்கள் கூறுவார்கள். அவர்களுக்கே தமது இறைவனின் அருள்களும், அன்பும் உள்ளன. அவர்களே நேர்வழி பெற்றோர். (அல்குர்ஆன் 2:155.-157)**

● எந்த அளவுக்கு நாம் இறைவனுக்கு நெருக்கமானவர்களாக ஆகிறோமோ அந்த அளவுக்கு அதிகமாக நாம் சோதிக்கப்படுவோம். எந்த அளவுக்கு நாம் சோதிக்கப்படுகிறோமோ அந்த அளவுக்கு இறைவனிடம் நமக்கு வெகுமதிகளும் உயர் பதவிகளும் காத்திருக்கின்றன.

# பயங்கரவாதமும் அதிபயங்கரவாதமும்

கத்தி முனையில் அல்லது துப்பாக்கி முனையில் அப்பாவியை அல்லது அப்பாவிகளை மிரட்டி தனது காரியங்களை அநியாயமாக சாதித்துக் கொள்வது போன்ற நடவடிக்கையே பயங்கரவாதம் என்று அழைக்கப்படுகிறது. துப்பாக்கி முனையில் ஆள் கடத்தல், கொள்ளையடித்தல், விமானக் கடத்தல், பொதுமக்கள் கூடும் இடங்களில் குண்டு வைத்து மக்களைக் கொல்லுதல், போன்றவற்றை யார் நிகழ்த்தினாலும் அவை கண்டிப்பாக பயங்கரவாத நடவடிக்கைகளே. அதே நேரத்தில் இவற்றை விட பன்மடங்கு பூதாகரமான அளவில் நடத்தப்படும் கொடூரங்களை விமர்சிக்க சரியான ஒரு வார்த்தைப் பிரயோகம் புழக்கத்தில் இல்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். இவற்றைக் குறிப்பிடுவதற்கு அதிபயங்கரவாதம் என்ற சொல்லை பயன்படுத்துவதும் கூட மிகவும் மென்மையான சொற்பிரயோகமே!

## அதிபயங்கரவாத நடவடிக்கைகள்

● வளங்கள் நிறைந்த நாடுகளுக்குள் வியாபாரிகளாக நுழைந்து அந்த நாட்டு அப்பாவிகளை ஆயுத முனையில் மிரட்டிக் கீழடக்கியும் படுகொலைகள் பல நிகழ்த்தியும் அவற்றைத் தங்களின் காலனிகளாக்குவது. நூற்றாண்டுகளாக அவற்றின் மீது ஆதிக்கம் செய்து அந்நாட்டு வளங்களை சுரண்டுவது. இன்னும் தொடர்ந்து சுரண்டிக்கொண்டே இருப்பது.

● இரண்டாம் உலகப் போரைத் துவங்கி போரிடும் அனைத்துத் தரப்பு நாடுகளுக்கும் வட்டிக்குக் கடனும் ஆயுதங்களும் கொடுத்து பொருளீட்டிய கொடுமை.

● ஆஸ்திரேலியாவில் 2 கோடி பூர்வகுடியினரையும் , வட அமெரிக்காவில் 10 கோடி செவ்விந்தியர்களையும் தென் அமெரிக்காவில் 5 கோடி செவ்விந்தியர்களையும் ஈவிரக்கமின்றி படுகொலை செய்து தங்கள் வெள்ளை இன மக்களை குடியேற்றம் செய்து தொடர்ந்து உலக வல்லரசாக நின்று உலகெங்கும் அடக்குமுறை செய்வது.

● அட்லான்டிக் அடிமை வாணிபம் என்று அறியப்படும் உச்சகட்ட கொடூரத்தை சுமார் 300 வருடங்களுக்கும் மேலாக நடத்தி வந்தது. அதாவது ஆப்பிரிக்காக் கண்டத்தில் கலாச்சாரத்தோடு வாழ்ந்து வந்த கருப்பின மக்களை அடிமைகளாகப் பிடித்து அவர்களை ஈவிரக்கமற்ற முறையில் கப்பல்களில் சரக்குகளைப் போல அடுக்கி ஐரோப்பாவுக்கும் அமரிக்காவுக்கும் ஏற்றுமதி செய்து பொருளீட்டியது.

● ஹிரோஷிமா - நாகசாகி மீது அமெரிக்கா அணுகுண்டு வீசி கோடிக்கணக்கான மக்களை அழிக்கவும் உடல் ஊனமுற்றவர்களாகவும் ஆக்கவும் செய்தது. அந்தக் கதிர்வீச்சின் பாதிப்பு இன்று பிறக்கும் தலைமுறைகள் வரைத் தொடர்கிறது.

● கைப்பற்றிய நாடுகளை பிற்காலத்தில் “விடுதலை” என்ற பெயரில்

விட்டுச்செல்லும்போது பல தந்திரங்களைப் பிரயோகித்து தங்கள் வியாபார நிறுவனங்களை நிறுவி அந்நாடுகளின் வளங்களை தொடர்ந்து கொள்ளையடித்து வருவது

- காலனிகளில் இருந்து விடுவித்த நாடுகளில் தங்களின் கைப்பாவை அரசர்களை அரியணையில் ஏற்றி அவர்களின் மூலமாக மறைமுகமாக ஆண்டுவருவதும் தங்களின் ஆயுத விற்பனை தொடர்வதற்காக அண்டைநாடுகளோடு போர்மூட்ட வைப்பது, அப்பாவிகளை அநியாயமாக கொன்றோழிப்பது...

**அதிபயங்கரவாதிகளை தண்டிப்பது எவ்வாறு?**

பயங்கரவாதிகளை தண்டிக்க கியூபாவில் உள்ள க்வாண்டனாமோ போன்ற சிறைகளைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளோம். ஆனால் இந்த அதிபயங்கரவாதிகளை தண்டிப்பது ஒரு புறம் இருக்கட்டும். இவர்கள் செய்ததும் இன்னும் தொடர்ந்து செய்துகொண்டிருப்பதும் குற்றம் என்பதைக் கூட யாரும் சொல்வதில்லையே?

# கொல்லவந்த போதும் மன்னித்த பெருந்தகை!

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆட்சிக்காலத்தில் தலைநகரமாக இருந்த மதீனாவிலும் அவர்களின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலும் யூதர்கள் வாழ்ந்தனர். கிறித்தவர்கள் வாழ்ந்தனர். முஸ்லிமல்லாத எத்தனையோ மக்கள் வாழ்ந்தனர். அவர்கள் அனைவரும் அவரவர் மதங்களைப் பின்பற்றும் உரிமை பெற்றிருந்தார்கள்.

கீழ்கண்ட சம்பவத்தை சற்று கவனியுங்கள்:

நபிகள் நாயகம் மதீனாவில் ஆட்சித்தலைவர் ஆக இருந்தபோது நடைபெற்ற நிகழ்வு:

யூதப் பெண்ணொருத்தி நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு நஞ்சூட்டப்பட்ட ஆட்டைக் கொண்டு வந்து கொடுத்தார். அதை நபி(ஸல்) அவர்கள் சாப்பிட்டார்கள்.

பிறகு அவள் நபி(ஸல்) அவர்களிடம் அழைத்து வரப்பட்டு அவளிடம் இதுபற்றி விசாரித்தார்கள்.

“உங்களைக் கொல்லும் நோக்கத்தில் அவ்வாறு செய்தேன்“ என்று அவள் கூறினாள்.

“அல்லாஹ் உனக்கு அந்தப் பொறுப்பைத் தரவில்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

“இவளைக் கொன்று விடட்டுமா? என நபித்தோழர்கள் கேட்டதற்கு “கூடாது“ என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(முஸ்லிம், அஹ்மத் ஆகிய நூல்களிலும் இந்த வரலாற்று நிகழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது)

# வாசகர் எண்ணம்

● திருக்குர்ஆன் நற்செய்தி மலர் படித்தேன். அனைத்து வரிகளும் அருமை. வாழ்க்கைக்கு ஏற்ற அறிவுரைகள்.

**- அகிலன் செல்வராசு, உதயமார்த்தாண்டம்**

● இதழ்கள் அருமை. வட்டிக்கு தடை, மனிதன் எப்படி வாழவேண்டும் என்பது பற்றி, பெண்ணியம் சார்ந்த கருத்துக்கள் அனைத்தும் எனக்கு படிக்க விருப்பம். தொடர்ந்து அனுப்பவும்

**- எழில்கோ ஓஷோ, சேலம்**

● கடந்த இரண்டு மூன்று வருடங்களாக நான் உங்கள் இதழைப் படித்து வருகிறேன். நான் ஒரு இந்து. ஆனாலும் உங்கள் மார்க்கத்தை நான் கடைபிடித்து வருகிறேன். இன்று முஸ்லிம்கள் குறிப்பாக பெண்கள் பர்தா பேணாமல் திரிவது வருத்தமாக உள்ளது.

**- ஐயப்பன், திருச்சி**

**● வாசகர்கள் தங்கள் கருத்துக்களை / பின்னூட்டங்களை SMS மூலமாகவும் வாட்சப்பில் வாய்ஸ் மெசேஜ் மூலமாகவும் 9886001357 என்ற நம்பருக்கு அனுப்பலாம். சிறந்த கருத்துக்களுக்கு நூல்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும் - நிர்வாகம்**

**வாசகர்கள் கீழ்கண்ட முறைகளில் சந்தா அனுப்பலாம்:**

**1. வங்கி மூலம் :**

**House Of Peace, ICICI bank, Indra Nagar branch, Bangalore. Account no. 016901013432**

**IFScode: ICIC0000169**

**2. PAYTM மூலம் சந்தா செலுத்த: இங்கு காணப்படும் QR CODE ஐ SCAN செய்து உங்கள் தொகையை செலுத்தலாம். தொடர்ந்து 9845373775 என்ற எண்ணுக்கு உங்கள் சந்தா எண் மற்றும் தொகை குறிப்பிட்டு SMS மூலம் தகவல் அனுப்பவும்.**

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9840527687 (பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்: 9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி: 9842627171 கோவை: 9600800050 திருப்பூர்: 9150068919 குன்னூர்: 9843622246 ஊட்டி: 9843927014 ஈரோடு: 7373947869, 9942958888 உடுமலை: 9865051917 பழனி : 9894278528 பொள்ளாச்சி: 9843657426 சேலம்: 9994091364 திருச்சி: 9865446344, 9442709087 மதுரை: 9789341714 கும்பகோணம்: 9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 தென்காசி :9443695979 வேலூர்: 6382301984, 9600426150, 9994810734 திருவண்ணாமலை: 9994564650, 9944905212 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்: 9043758656 அதிராம்பட்டினம் 9566811099 கே.ஜி.எ.ஃ.ப்: 9845217262

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn.No. KRNA/BGE/1057/2018-2020
Posted at Bangalore PSO, Mysore road, Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of pages:24+4
Licenced to post without prepayment. Licence No.WPP-308
Date of Publication: 25th of every month

**(PRINTED MATTER)**

To

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

